

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.7.2025) திருச்சிராப்பள்ளி, ஜமால் முகமது கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற ஜமால் முகமது கல்லூரியின் பவளவிழா ஆண்டின் தொடக்க விழாவில், குளோபல் ஜமாலியன்ஸ் பிளாக் கட்டடத்தை திறந்து வைத்தார். இந்த விழாவில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் காதர் மொகிதீன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருச்சி சிவா, நவாஸ் கனி, கவிஞர் சல்மா, சட்டமன்ற உறுப்பினர்கள் இனிகோ இருதயராஜ், அப்துல் சமது, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், ஜமால் முகமது கல்லூரியின் தலைவர் ஜமால் முகமது பிலால், செயலாளர் காஜா நஜீமுதீன், பொருளாளர் ஜமால் முகமது, கல்லூரி முதல்வர் முனைவர் ஜார்ஜ் அமலரெத்தினம், கல்லூரியின் நிர்வாக குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

நமது 'திராவிட மாடல்' அரசு சாதிக்க அடித்தளமிட்ட சமூகநீதி நாயகர்

# பனகல் அரசரைப் போற்றி வணங்குகிறேன்!

## பனகல் அரசர் பிறந்த நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, ஜூலை 11-**

**நீதிக் கட்சியின் நீட்சியாக, சமத்துவப் பாதையில் நமது திராவிட மாடல் அரசு சாதிக்க அடித்தளமிட்ட சமூக நீதி நாயகர் பனகல் அரசர் அவர்களின் பிறந்தநாளில் அவரைப் போற்றி வணங்குகிறேன் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள பனகல் அரசரின் பிறந்தநாள் வாழ்த்துச் செய்தியில் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.**

முன்னாள் சென்னை மாகாண முதலமைச்சர் பனகல் அரசர் அவர்களின் பிறந்த நாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

Reservation is our Right என இன்று நாம் தலைநிமிர்ந்து முழங்க நூறாண்டுகளுக்கு முன்பே Communal GO மூலம் வழி வகுத்த சமூகநீதி நாயகர்,

திருச்செந்தூரில் வெகு விமரிசையாக நடந்த குடமுழுக்கு போல 3000+ திருக்கோயில்களில் இந்து சமய அறநிலையத் துறை நடத்தியிருக்கிறது,தமிழ்நாடெங்கும் ஆயிரக்கணக்கான கோயில்கள் குறிப்பிட்ட எந்த வகுப்பாரிடமும் சிக்காமல் முறையாக நிர்வகிக்கப் படுகிறது என்றால் அவற்றுக்கெல்லாம் அன்றே இந்து சமய அறநிலையச் சட்டம் இயற்றி விதையூன்றியவர்,

ஆதிதிராவிட மக்களின் மாண்பைக் காப்பதில் உறுதியாக நின்ற தீரர். நீதிக்கட்சியின் நீட்சியாக, எல்லாருக்கும் எல்லாம் என்ற சமத்துவப் பாதையில் நமது திராவிட மாடல் அரசு சாதிக்க அடித்தளமிட்ட பனகல் அரசர் அவர்களின் பிறந்த நாளில் அவர் பங்களிப்புகளைப் போற்றி வணங்குகிறேன்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## மகாராஷ்டிரா வாக்காளர் பட்டியலில் மோசடி நடைபெற்றதுபோல்

# பீகார் மாநிலத்திலும் தேர்தலில் மோசடியை அரங்கேற்ற பா.ஜ.க. சதி!

## பீகாரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ராகுல்காந்தி குற்றச்சாட்டு!

## தேஜஸ்வி யாதவ் – டி.ராஜா உள்ளிட்ட கட்சித் தலைவர்கள் பங்கேற்றனர்!





**பாட்னா, ஜூலை 11 -**

**மகாராஷ்டிரா மாநில வாக்காளர் பட்டியலில் மோசடி நடைபெற்றது போல், பீகார் மாநிலத் தேர்தலிலும் மோசடியை அரங்கேற்ற சதி நடைபெற்று வருவதாக, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.**

பீகார் மாநிலத்தில் இந்தாண்டு சட்டப்பேரவை தேர்தல் நடைபெற உள்ள நிலையில், பா.ஜ.க. வெற்றி பெறுவதற்கு சாதகமாக, வாக்காளர்களை நீக்கும் வகையில், புதிய திருத்த விதிகளை தேர்தல் ஆணையம் கொண்டு வந்துள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

வாக்காளர்கள், தாங்கள் இந்தியர்கள்தான் என்பதை நிரூபிக்க பிறப்புச் சான்றிதழ் கட்டாயம் என்ற கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதற்கு எடும் எதிர்ப்பு எழுந்துள்ளது. அதன் மூலம் சுமார் 2 கோடி வாக்காளர்களை நீக்க சதி நடப்பதாக காங்கிரஸ், ராஷ்ட்ரிய ஜனதா தளம் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டி வருகின்றன.

இதையடுத்து, வாக்காளர் பட்டியலை மாற்றியமைக்கும் செயலுக்கு எதிராகவும், புதிய தொழிலாளர் விதிமுறை, சட்டம் ஒழுங்கை கண்டித்தும் பீகார் தலைநகர் பாட்னாவில், மகாகத்பந்தன் என்ற பெயரில் எதிர்க் கட்சிகள் மாபெரும் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

பாட்னாவில் நடைபெற்ற போராட்டத்தில், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி, ராஷ்ட்ரிய ஜனதா கட்சித் தலைவர் தேஜஸ்வி யாதவ், இந்திய கம்யூனிஸ்ட் தேசிய பொதுச் செயலாளர் டி.ராஜா உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

போராட்டத்தின் போது பேசிய ராகுல்காந்தி, தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகள் காரணமாக, ஏராளமான வாக்காளர்கள், பட்டியலில் இருந்தும் நீக்கப்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார். மகாராஷ்டிராவில் வாக்காளர் பட்டியலில் பெருமளவு மோசடி நடைபெற்றுள்ளதாகவும் அவர் குற்றஞ் சாட்டினார்.

மேலும் ராகுல் காந்தி பேசுகையில்,

கடந்த சில மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற மக்களவை தேர்தலில் மகாராஷ்டிரா மாநிலத்தில் இந்தியா கூட்டணி பெரும்பான்மை வாக்குகள் பெற்றது பிறகு நடைபெற்ற சட்டப்பேரவை தேர்தலில் இந்தியா கூட்டணிக்கு பெரும்பான்மை வாக்குகள் கிடைக்கவில்லை.

இதன் மூலம் மகாராஷ்டி ராவில் வாக்காளர் பட்டியலில்மோ மோசடி நடைபெற்றது உறுதியாகிறது குறைந்த காலத்தில் ஒரு கோடி பேர் வாக்காளர்களாக சேர்க்கப்பட்டு அந்த வாக்குகள் பா.ஜ.க.விற்குச் சென்றுள்ளது என்றார்.

தொடர்ந்து பேசிய அவர், வாக்காளர் பட்டியலை முழுமையாக வெளியிட கோரிக்கை விடுத்தும், இதுவரை வெளியிடப்படவில்லை எனவும், தற்போது வீடியோ ஆதாரங்களையும் வழங்க முடியாது என்று தேர்தல் ஆணையம் கூறுவதாகவும் குற்றஞ்சாட்டினார்.

மகாராஷ்டிரா மாநில தேர்தல் மோசடி போன்று, பீகார் மாநிலத்திலும் மோசடியை அரங்கேற்ற சதி நடைபெற்று வருவதாகவும் ராகுல்காந்தி தெரிவித்தார்.




சென்னை, பன்னாட்டு விமான நிலையத்தில், நேற்று முன்தினம் (09.07.2025) ஹஜ் புனிதப் பயணம் மேற்கொண்டு சென்னை திரும்பிய தமிழ்நாட்டைச் சேர்ந்த ஹஜ் பயணிகளை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் சா.மு.நாசர் பொன்னாடை அணிவித்து வரவேற்றார். இந்நிகழ்வின்போது தமிழ்நாடு மாநில ஹஜ் குழு செயல் அலுவலர்/அரசு முதன்மைச் செயலாளர் மு.அ.சித்திக் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் கழகத்தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, தாராபுரம் சட்டமன்றத் தொகுதி, தாராபுரம் நகர கழகத்தின் சார்பில் வார்டு எண். 21, பாகம் 169ல் "ஓரணியில் தமிழ்நாடு" கழக உறுப்பினர் சேர்க்கையில் மனித வள மேலாண்மைதுறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என். கயல்விழி செல்வராஜ் தலைமையில் ஈடுபட்டனர். இதில் நகர கழக செயலாளர் சு.முருகானந்தம், நகர்மன்றத் தலைவர் கு.பாப்புக்கண்ணன், தொகுதி பார்வையாளர் கணேஷ், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் சரஸ்வதி இராஜேந்திரன் உள்பட நகர கழக நிர்வாகிகள், BLA2, BDA, வார்டு செயலாளர்கள், தேர்தல் பொறுப்பாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.